DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: C.C. No.46 /2024

Session ...

Prosecution / PW-1

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.சரவணன்

Father's Name (or)

Husband Name : த/பெ.உதயகுமார்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தொண்டி காந்தியார்தெருவில் குடியிருந்து வருகிறேன், ஸ்ரீகுமரன் என்ற பெயரில் நகை கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர்எதிரி எனது உடன்பிறந்த தம்பி ஆவார். அவருக்கும் எனக்கும் கடந்த 5 வருடங்களாக சொத்து பிரச்சனையின் காரணமாக பேச்சு வார்த்தை இல்லை. எனது நகை கடைக்கு எதிரில் எதிரி அடகு கடை வைத்து நடத்தி வருகிறார். அந்த கடையில் வைத்து முன்னர் எனது அப்பா ஜாதகம் பார்த்து வந்தார். எனது அ்பபாவிற்கு நான் ஒருமேஜை வாங்கி

கொடுத்திருந்தேன். எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது அதன்பிற்கு அந்த கடையை எனது தம்பி அடகு கடை வைத்து நடத்தி வந்தார். இந்நிலையில் 23.10.2023 தேதி ஆயுதபூஜை என்பதால் கடையை சுத்தம் செய்வதற்காக காலை 10 மணியளவில் எனது கடைக்கு சென்றேன். அப்போது எதிரே இருந்த எனது தம்பியும் கடையில் கிடைந்த எனது அப்பாவின் மேஜையை நான் எனது சித்தப்பா மகனாகிய ராஜீவிடம் சொல்லி மேஜையே கேட்டபோது எதிரி தேவுடிய முண்டை என்று அசிங்கமாக என்னை பேசினார்.

2. எதற்காக இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு டக்கென்று கடைக்குள் இருந்துஅ ருவாள் எடுத்து வந்து என்னை வெட்ட வந்தார். நான் கையை வைத்து தடுத்ததில் எனது ஆள்காட்டிவிரலும், நடுவிரலும் வெட்டு பட்டது. எனக்கு தெரிந்த முரளி என்பவர் என்னை அழைத்து கொண்டு தொண்டி காவல்நிலையத்திற்கு கூட்டிசென்றார். காவல்நிலையத்தில் என்னை முதலில் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நான் அங்கிருந்து கிளம்பி தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று முதலுதவி பெற்று கொண்டு திருவாடானை அரசு மருத்துவமனைக்கு உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் மாலை 5 மணியளவில் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் விசாரிக்க வந்த காவலா சுதா அதனை எழுதினார்கள். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 4 நபர்கள் ஆவார்கள். நானும் ஆஜர் எதிரியும் ஆண் பிள்ளைகள் மேலும் இரண்டு சகோதரிகள் உள்ளனர். எனது சகோதரிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் ச ரிதான். நான் ஸ்ரீகுமரன் என்றபெயரில் நகை கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான்.ஆஜர்எதிரி நகை அடகு கடை வைத்துள்ளார். ஆஜர் எதிரி நகை அடகு கடை வைத்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்களின் சொத்துகளை பிரித்துகொண்டோமா என்றால்

பிரித்துகொண்டோம். ஆஜர் எதிரி மட்டும் எனது தாயாரின் வீட்டிற்கான பணத்தை வாங்கவில்லை. சம்பவசமயத்தில் நானும் ஆஜர் எதிரியும் ஒரே வீட்டில் மேலேயும் கீழேயும் வசித்து வந்தோம். எனது தகப்பனார் 25 வருடங்களாக ஜோதிடம் பார்த்து வந்தார்.

2.எனது தகப்பனார் ஜாதகம் பார்த்து கிடைக்கபெற்ற வருமானத்தை நான் வைத்துகொண்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் சொத்துகளை நான் மட்டும் வைத்துகொண்டு ஆஜர் எதிரிக்கு எதையும் கொடுக்காததால் தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்மீது புகார்கொடுத்து அந்த வழக்கானது நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு நான் அந்த வழக்கில் தண்டிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் கட்டினேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.